**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC. No.314/2025**

**PW - 5** (கூடுதல் சாட்சி)

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. வேத பிறவி |
| Father's / Husband Name | : | த/பெ.பெரியதம்பி |
| Village | : | சேலம் |
| Taluk | : | சேலம் |
| Calling | : | காவல் ஆய்வாளர், வேலக்கவுண்டம்பட்டி |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **08.06.2026** தேதியில் திரு.ஞானவேல், இளநிலை உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர்)**

**முன் விசாரணை:–**

1) நான் தற்போது வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்த திரு.கைலேஷ்வரன் காவல் உதவி ஆய்வாளர் இறந்துவிட்டார். காவல் ஆய்வாளர் திரு.P.செல்வராஜ் அவர்கள் பணி ஓய்வு பெற்றுவிட்டார். மேற்படி சாட்சிகளின் கையெழுத்தும், கையொப்பமும் நன்கு பரிட்சையம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 16.12.2024ம் தேதி திரு.கைலேஷ்வரன் காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் பணியில் இருந்த போது காலை 09.00 மணிக்கு தமிழ்மணி த/பெ. முத்துசாமி என்பவர் நிலையம் ஆஜர் ஆகி கொடுத்த புகாரை பெற்று வேலகவுண்டம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.161/2024 சட்டப்பிரிவுகள் 281, 125 (a), 106(1) BNS ஆக வழக்கு பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் அசல் புகார் வாக்குமூலத்தை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், இவ்வழக்கின் புலன் விசாரணைக்காக P. செல்வராஜ், காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

2) மேலும், அன்றைய தினமே வழக்கு கோப்பை விசாணைக்கு எடுத்துக்கொண்டு காலை 10.00 மணிக்கு சம்பவயிடமான புத்தூர் – வேலகவுண்டம்பட்டி ரோடு, மன்னான்காடு நாச்சியம்மன் மளிகை கடை அருகே சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு, சம்பவயிட சாட்சிகளான அருண்குமார் மற்றும் திவாகரன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் அருண்குமார், திவாகரன் ஆகியோர்களை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3) மேலும், பின்னர் அன்றைய தினமே நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் சவக்கிடங்கின் முன்பு வழக்கு விபத்தில் இறந்துபோன செல்வராஜ் த.பெ. கோபால் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் சாட்சிகள் முன்னிலையில் மதியம் 12.30 மணி முதல் 01.30 மணி வரை விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். **மேற்படி பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகி**றது.

4) மேலும், அன்றையதினமே சாட்சி 1 தமிழ்மணி 2. சாந்தி, 3. இளம்பருதி, 4.கனகராஜ், 5.கதிர்வேல் 6. அருண்குமார், 7. திவாகர் ஆகியோர்களை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கு விபத்தில் இறந்துபோனவரின் இறப்பிற்கான மருத்துவ ரீதியான காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்க கோரி நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவ அலுவலர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதத்தை முதல்நிலை காவலர் 1696 முத்தம்மாள் அவர்கள் மூலம் கொடுத்தனுப்பி பிரேத பரிசோதனை சான்று பெறப்பட்டது. **மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

5) மேலும், இவ்வழக்கின் எதிரியை தொடர்ந்து தேடி வந்த நிலையில் 20.12.2024 ம் தேதி 10.00மணிக்கு நிலையம் நிலையம் ஆஜரான எதிரியை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் காவல் பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் அன்றைய தினமே வழக்கில் விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 28 AR 3317 என்ற பதிவெண் கொண்ட அசோக் லைலேண்ட் டெம்போ மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பாமாபிரியா அவர்களுக்கு அனுப்பி வைத்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றுள்ளார். **மேற்படி TN 28 AR 3317 என்ற பதிவெண் கொண்ட அசோக் லைலேண்ட் டெம்போ மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படு**கிறது. பின்னர் 07.01.2025 ம் தேதி வழக்கில் விபத்திற்குள்ளான வாகனமான TN 34 Q 9789 என்ற பதிவெண் கொண்ட Honda இருசக்கர

வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பாமாபிரியா அவர்களுக்கு அனுப்பி வைத்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றுள்ளார். **மேற்படி TN 34 Q 9789 என்ற பதிவெண் கொண்ட Honda இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படு**கிறது.

6) பின்னர் 25.01.2026 ம் தேதி இவ்வழக்கின் விபத்தில் இறந்து போன செல்வராஜ் த.பெ. கோபால் அவர்களுக்கு சான்று வழங்கிய சட்டம் சார்ந்த மருத்துவர் திரு.ரகுதீபன் மற்றும் இவ்வழக்கில் காயம் பட்ட வாதி தமிழ்மணி த/பெ முத்துசாமி, விபத்து பதிவேடு பதிவு செய்து சான்று வழங்கிய மருத்துவர்.திரு. கார்த்திக்கேயன் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.பாமாபிரியா, பிரேத பரிசோதனையின் போது உடனிருந்த திரு. முத்தம்மாள் முதல்நிலை காவலர் 1496, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு.ஆ.கைலேஷ்வரன் ஆகியோர்களை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து 25.01.2025 ம் தேதி வழக்கின் எதிரி மீது 281, 125(a), 106(1) BNS ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

7) புகாரிலோ, சாட்சிகளின் போலிஸ் வாக்குமூலத்திலோ எதிரியின் பெயர், முகவரி குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. சாட்சிகள் யாரும் எதிரியின் பெயரை குறிப்பிடாத நிலையில் எதிரி தான் வாகனத்தை ஓட்டி விபத்தை ஏறப்படுத்தினார் என்ற புலனாய்வு அதிகாரியின் முடிவு சரியானது அல்ல என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி யாரையும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரி. இறந்து போன நபருக்கான விபத்து பதிவேட்டில் விபத்தை ஏற்படுத்தியது நான்கு சக்கர லாரி என்று கண்டுள்ளது. மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் எதிரியின் வாகனத்திற்கு சேதாரம் ஏற்பட்டதாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. எதிரிக்கும், விபத்திற்கும் தொடர்பில்லை என்றும், அ.சா.1 கொடுத்த தவறான புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு ஏற்றாற்போல் புனையப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**